மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2019ம் வருடம் செப்டம்பர் திங்கள் 26ஆம் நாள் புதன்கிழமை

**I.A . No. 319/2019**

**in**

**O.S. No. 47/2017**

M. ஆறுமுகம்

..... மனுதாரர்/வாதி

//எதிர்//

M. மனோகரன்

.... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 21.06.2019ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A. வேலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் திரு.N. சக்திவேல் அவர்கள் ஆஜராகியும், கடந்த 18.09.2019ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

## உத்தரவு

இம்மனு, இந்திய முத்திரை தாள் கட்டணச்சட்டம் பிரிவு 35 ன்படி, அபராத தொகையினை செலுத்தி மனுதாரர்/வாதி தரப்பில் 2வது சான்றாவணமாக பாகபாத்திய விடுதலை பத்திரத்தை குறியீடு செய்ய அனுமதியளித்து உத்தரவிடவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுவின் சுருக்கமும் அதன் பேரிலான மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதமும்:

அசல் வழக்கில் வாதி தரப்பு ஆவண பட்டியலில் 2வது ஆவணமான 4.04.1988ம் தேதியிட்ட பிரதிவாதி எழுதி சாட்சிகள் முன்னிலையில் கையெழுத்திட்டு கொடுத்த பாக பாத்திய

விடுதலைப்பத்திரத்தை அப்பொழுது இருந்த பொருளாதார நிலைமையாலும், பின்னாளில் தாவா சொத்தில் எவ்வித இடையூறும் செய்யமாட்டேன் என பிரதிவாதி உறுதியளித்ததாலும், பதிவு செய்ய இயலாமல் போய் விட்டது என்றும், தற்பொழுது பிரதிவாதி 3ம் நபர்களின் தூண்டுதலால் பிரதிவாதி தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முயன்று வருவதால், பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், வாதி தரப்பு சான்றாவணமான மேற்படி பதிவு செய்யப்படாத பாகப்பத்திரம் சட்டப்படி உரிய முத்திரை வில்லை ஒட்டி பதிவு செய்யப்படாததால் நீதிமன்றத்தில் குறியீடு செய்ய இயலாமல் உள்ளதால், நீதிமன்றம் உத்தரவிடும் அபராத தொகையை செலுத்தி மேற்படி வாதி தரப்பு 2வது ஆவணமான பாகபாத்திய விடுதலைபத்திரத்தை குறியீடு செய்வது அவசியம் என்றும், இல்லாது போனால் அசல் வழக்கில் வாதிக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்பதால் இம்மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பிக்கும்படி வேண்டப்பட்டது.

**<u>2) எதிர்மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர் உரையின் சுருக்கமும் அதன் பேரிலான எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதமும்:</u>**

வாதி தரப்பில் ஆவண பட்டியலில் கண்ட 2வது ஆவணமான பாகபாத்திய விடுதலைப்பத்திரத்தை இந்த நிர் பிரதிவாதி எழுதிக்கொடுத்தாகவும், அப்பொழுது இருந்த பொருளாதார நிலைமை, மற்றும் தாவா சொத்தில் பின்னால் எந்தவித இடையூறும் செய்யமாட்டேன் என பிரதிவாதி கூறியதால், மேற்படி பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்பதாகவும் இம்மனுதாரர்/வாதியால் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவையாகும். உண்மையில் இந்த நிர் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு படிப்பறிவு இல்லாததால், ஆரம்ப காலத்திலிருந்து தற்போது வரை கைரேகை மட்டும் செய்து வருகிறார் என்றும், எந்த காலத்திலும் கையொப்பம் செய்ததில்லை என்றும், இந்நிலையில் மேற்படி இடைமனுவில் மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கில் வாதி தரப்பில் 2வது ஆவணமாக குறியீடு செய்ய இயலாது என்றும், மேற்படி அசல் வழக்கில் மேற்படி 2வது ஆவணம் பிரதிவாதியை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாத போது மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் குறியீடு செய்ய முடியாத ஆவணம் ஆகும் என்றும், மேற்படி ஆவணத்தை பொறுத்து எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கடுமையான ஆட்சேபணை செய்யப்படுகிறது என்றும், மேற்படி இடைநிலை மனு உரிய வழக்கு மூலம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இம்மனுவை செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யும்படி வேண்டப்பட்டது.

**<u>தீர்வு:-</u>**

3) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

4) இரு தரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த நிர் மனுவின் மனுதாரர் / வாதியால் 04.04.1988ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத பாக பாத்திய விடுதலை பத்திரத்திற்கு இந்திய முத்திரைத்தாள் கட்டண சட்டம் பிரிவு 35ன் படி அபராத தொகையினை செலுத்தி ஆவணமாக குறியீடு செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் / பிரதிவாத தரப்பில் மேற்படி பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டதையும், அதில் கையெழுத்திட்டுள்ளதையும் மறுத்துள்ளார்கள். ஆனால் கையெழுத்து உண்மையானதா அல்லது பத்திரம் உண்மையில் எழுதி கொடுக்கப்பட்டதா என்பதை முழுமையான சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையிலேயே தீர்வு காண இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இந்திய பதிவுச்சட்டம் பிரிவு 17-ன் படி பதிவு செய்யப்படாத ஆவணங்கள் சாட்சியத்தில் சட்டப்படி ஏற்கக்கூடியதோ அல்லது அனுமதிக்கக்கூடியதோ இல்லை என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடு ஆகும். அதுவும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய பிறிதொரு வழக்கு தீர்ப்பில் உறுதி செய்யப்பட்டு அதுவும் 2017 (2) MWN (civil) 654 சட்ட இதழில் பதிவுகள் ஏற்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் அடியிற்கண்ட வழக்கில் பதிவு செய்யப்படாத ஆவணங்களுக்கு முத்திரை தீர்வு செலுத்துவது மற்றும் மேற்படி ஆவணங்களை அனுமதிப்பது தொடர்பாக உத்திரவிடப்பட்டுள்ளது. அதுவும் 2017 (1) TNCJ 473 (Mad) (MB)சட்ட இதழில் பதிவுகள் ஏற்பட்டுள்ளது.

Fausiza S. Kabir (v) The Secretary, Madurai Hosiery industries Association, Madurai. case,

Section 35 and 36 Stamp Act : Documents – Admissibility:

Rental Agreement is not properly stamped and it is not registered as it is for more than 11 months documents produced for marking by a party cannot be rejected without marking when other side object to same documents has to be marked subject to objection and said objection has to be considered after conclusion of trial and at time of delivery of judgment – No illegality or irregularity in impugned order – civil revision dismissed.

மேலும், வழக்கு தரப்பினர்களிடையேயான பிரச்சினையை முழுமையாகவும் அறுதியாகவும் தீர்வு காண்பதற்கு இருதரப்பினருக்கு சாட்சியங்களை முன்னிலைப்படுத்துவதற்கு போதுமான

வாய்ப்பு கொடுத்து முழுமையாக சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையிலேயே தீர்வு காணப்படவேண்டும் என்பதும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடாகும்.

எனவே, மேற்கண்ட பொருண்மை மற்றும் சட்ட நிலைப்பாடுகளின்படி இம்மனு அனுமதிக்கக்கூடியது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் இம்மனு நடவடிக்கையில் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கால விரையம் மற்றும் பொருளாதார விரையத்தை ஈடு செய்யும் பொருட்டு மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவு தொகையாக ரூ.500 /-ஐ 3 தினங்களுக்குள் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக இம்மனு நடவடிக்கையில் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட கால விரையம் மற்றும் பொருளாதார விரையத்தை ஈடு செய்யும் பொருட்டு மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவு தொகையாக ரூ.500/-ஐ 3 தினங்களுக்குள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

செலவு தொகை செலுத்த கால அவகாசம் : 3 தினங்கள்
அடுத்த கேட்பு நாள் 30.09.2019

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2019ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//